ஓம.

சேந்திலாண்டவன் துணை.

# அப்பூதி அடிகள்

29

— ஓர் —

## பக்தி ததும்பும் தமிழ் நாடகம்.


ஆசிரியன்

தஞ்சை

N. விஸ்வநாத ஐயர்


இந்நூலாசிரியர் இயற்றிய இதர தமிழ் நாடகங்கள் :—

ராஜசேகரன் அல்லது இன்று தேசபரவசகன்,

வீரஸிம்ஹன் அல்லது மெய்க்காதலின் இரகசியம்,

ஸ்ரீ ராமதாஸ் அல்லது பக்தியே பரமானந்தம்

முதலியன.

With my best ... N. Viswa... The (


T000296

Sarasvati Mahal Library. Thanjavur



பதிப்பகம்

தஞ்சை "ஸ்ரீ ஷண்முக அச்சுக்கூடம்"

1934



காபிரைட் ரேஜிஸ்டர்டு]


[விலை அணா எட்டு

ஸ்ரீ :

தேவி மீனாட்சியின் திருவடி நிழல் எய்திய

**என் தாய்**

R. நாகசுப்பு அம்மைக்கும்,

சிவகதியடைந்த

**என் தந்தை**

இராவ்சாஹிப்

R. நாராயணஸ்வாமி அய்யர்

(பீ. ஏ., ரிட்டையர்டு, டெப்டி கலெக்டர்,) அவர்களுக்கும்,

இறைவன் அடி சேர்ந்த

**என் குரு**

N. S. ஜம்புநாத அய்யர்

(பீ. ஏ., எல். டி., F. Z. S லண்டன்,) அவர்களுக்கும்,

**கலியுக தெய்வமாம்**

ஸ்ரீ ஷண்முகக் கடவுளுக்கும்,

**இச்சிறிய நூலை**

பக்தியுடனும் பணிவுடனும் சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் தத் ஸத்.

உ

செந்திலாண்டவன் துணை.

# முன்னுரை

நாடகக்கலையில் எனக்குற்ற எல்லையற்ற பற்றினாலும் அக்கலையை யான் முறைப்படி கற்க, சென்ற ஈராறாண்டுகளாக போதிய வசதிகளை அளித்துவரும் (The Young Men's Literary Association) தஞ்சை ஸ்ரீ குமரகான சபையார் ஆதரவினாலும், தமிழன்பர்களும், நடிகர்களும் எனது ஏனைய நாடக நூல்களைப் படித்தும் நடித்தும் கொடுத்துவரும், ஊக்கத்தினாலும், இக் கலையில் என் முன்னேற்றமே தம் நன்னோக்கமாகக்கொண்ட காலஞ்சென்ற என் ஆசிரியர் N. S. ஜம்புநாத ஐயரவர்கள் இதனை நாடக ரூபமாக இயற்றப் பணித்தமையினாலும், அச்சிடப் பெறுவதற்கு முன்னரே மாணவர்களாலும், சபையோர்களாலும், பன்முறையும் விருப்பத்துடன் நடிக்கப்பெற்றமையாலும், சென்ற ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வரைந்த, இச்சிறு நாடகத்தை அன்புருவாய் விளங்கும், திருமுருகன் பேரருளினால், ஒருவாறு துணிந்து வெளியிடலானேன்.

இந்நாடகத்தின் சுவை கெடாமலும், நடிக்கையில் இடர் படாமலும் இருக்குமாறு, நடன் ( Actor ) நடிகாசிரியன் ( Conductor ) நாடக நூலாசிரியன் ( Play-wright ) என்ற முறையில் இதுகாறும் எனது சிற்றறிவுக்கெட்டிய அனுபவத்தை ஒட்டி, அறத்தின் மேன்மையையும், அன்பின் தன்மையையும், பக்தியின் சக்தியையும் நன்கு விளக்கியிருப்பதுடன், இந்நாடகத்தை அங்கங்களாக வகுக்கவேண்டியதை விடுத்து ஒன்பது காக்ஷிகளாகத் தொடுத்து, ஒவ்வொன்றின் தலைப்பிலும் வேண்டிய

நாடகப் பாத்திரங்களைக் கொடுத்து, உற்ற இடங்களில் திருநாவுக்கரசர் பாடல்களையே எடுத்து, அச்சிட்டிருக்கின்றேன். இதன் கண்ணுள்ள "குற்றங்களைந்து குறைபெய்து கொள்ளுதலே கற்றறிந்த மாந்தர் கடன்" ஆம்.

அடியேனது வேண்டுகோளுக்கிணங்கி, எனது ஏனைய நூல்களுக்கு உதவியதுபோல, இந்நூலிலும் உள்ள பிழைகளைத் திருத்தியும், சில அரிய செய்யுட்களை உற்ற இடத்து அமைத்தும் உதவிய தமிழறிஞர், எனது நண்பர் திரு. வி. சேஷாத்திரி சர்மா அவர்களுக்கு எனது என்றும் மறவா நன்றி உரித்தாகுக.

இந்நாடகத்தையாவது அல்லது எனது ஏனைய நாடகங்களையாவது நடிக்க விரும்புவோர், ஒவ்வொரு முறையும் என் முன் அனுமதி பெற்றபின்னரே நடித்தல் வேண்டும், என்பதை மீண்டும், நினைப்பூட்டுகின்றேன்.

**ஸ்ரீ ஸ்கந்த பவனம்,**
தெற்கு அலங்கம், தஞ்சாவூர்.

**N. விஸ்வநாதன்,**
*ஆசிரியன்.*

# நாடகப் பாத்திரங்கள்.

திருநாவுக்கரசர் - சைவ சமயாச்சாரியார்களில் ஒருவர்.

அப்பூதி அடிகள் - திருநாவுக்கரசரைத் தன் குலகுருவாக எண்ணிய ஓர் அந்தணர்.

மூத்த திருநாவுக்கரசு - அப்பூதி அடிகளின் மூத்த மைந்தன்.

வாக்கீசன் - அப்பூதி அடிகளின் இளைய மைந்தன்.

சுப்பு தீக்ஷிதர் - தஞ்சையில் வசிக்கும் ஓர் புரோகிதர்.

நீலகண்டஸாஸ்திரிகள்
கிருஷ்ணகனபாடிகள் } திங்களூரில் வசிக்கும் புரோகிதர்கள்.

கங்காதரர் - தண்ணீர் ஊற்றும் ஓர் அந்தணர்.

சுந்தரம் - அப்பூதி அடிகள் வீட்டில் சமையல் செய்பவர்.

சிவநேசர்
தேசிகர் } திருநாவுக்கரசரைத் தொடரும் அடியார்கள்.

குணவதி - அப்பூதி அடிகளின் மனைவியார்.

கூற்றுவன் - தென்திசைக் காவலன்.

இன்னும் :— அடியார்கள், வழிப்போக்கர்கள் முதலானோர்.

நாடகம் நிகழ்விடம் :— திங்களூரிலும், திருப்பழனத்திலுமாம்.

உ

சேந்திலாண்டவன் துணை.

# அப்பூதி அடிகள்.

## காக்ஷி. 1.

இடம் :— திங்களூருக்குச் செல்லும் ஓர் சாலை.

காலம் :— பிற்பகல்.

பாத்திரங்கள் :—சுப்பு தீக்ஷதர், நீலகண்ட ஸாஸ்திரிகள், கிருஷ்ண கனபாடிகள்.

(சுப்பு தீக்ஷதர் தாகத்தினல் மிகவருந்தி, கையில் தாழங் குடையுடன், சாலையின் ஓர் பக்கத்தில் அமர்ந்த வண்ணம் யோசனையிலிருக்கிறார்.)

சு. தீ. உஸ்! அடாடாடா! என்னவெயில் உடம்பெல்லாம் இப்படி தகிக்கின்றதே. நாவோ வரண்டுவிட்டது. வழியில் உள்ள சில கிரகங்களில் தீர்த்தம் சாப்பிடுவதற்குக்கூட ஹேதுது சிறிதும் காணும். காவிரியிலோ தண்ணீர் வரண்டு விட்டது. என்ன செய்வது! பொறுத்தது பொறுத்தோம். திங்களூர் இன்னும் ஒரு நாழிகை தூரத்தில்தான் இருக்கிறது. அவ்விடம் சென்று நமது தாகத்தைத் தீர்த்துக்கொள்ளலாம். (நீலகண்ட ஸாஸ்திரிகள் பிரவேசம்) பெரியவாளுக்கு நமஸ்காரம்.

நீ. ஸா. தீர்க்காயுஷ்மான் பவ! தாங்கள் எவ்வூர்? எவ்விடத்திலேயோ தங்களைப் பார்த்தமாதிரியாகத் தோன்றுகிறதே!

சு. தீ. எங்கே என்ன! தஞ்சையில் பார்த்திருக்கலாம்.

நீ. ஸா. தஞ்சாவூரிலிருந்தா வருகிறீர்கள். ஐயோ! பாவம். இந்தப்படும் வெய்யிலிலே .... ....

சு. தீ. ஆம். என்ன செய்வது. எண்சாண் உடலைக்காப்பாற்ற வேண்டியிருக்கின்றதே! அதிருக்கட்டும், தங்கள் நாம தேயம்?

நீ. ஸா. நீலகண்ட ஸாஸ்திரிகள் என்று சொல்லுவார்கள். ஆமாம் தாங்கள் இவ்வூருக்கு வந்த விஷயமென்ன?

சு. தீ. உங்கள் ஊர் பண்ணை கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் கிரகத்தில் நாளையதினம் கிரகப்பிரவேசம். அவர் நமக்கு மிகவும் வேண்டியவர்.

நீ. ஸா. ஆமாம். ஆமாம்! ஏதோ பழய சிநேகிதத்தை உத்தேசித்து நம்மையும் அவ்விடத்தில் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

சு. தீ. இது என்ன பிரமாதம். அவ்விடம் கொஞ்சம் முன்னதாகவே வந்து விடுங்கள். ஸாஸ்திரிகளே! எனக்குத்தாகம் அதிகமாக இருக்கின்றது. நல்ல தீர்த்தம் எங்கே கிடைக்கும்?

நீ. ஸா. இதோ இச்சாலையின் வழியே சென்றால் .... .... (எதிரில் **கிருஷ்ணகனபாடிகள்** கையில் பாத்திரத்துடனும், விசிறியுடனும் வருகிறார்.) கனபாடிகளே! எங்கே இப்படி?

கி. க. திருப்பழனத்துக்குப் போகின்றேன்.

நீ. ஸா. நானும் வருகிறேன் இரும். என்னபாத்திரத்தில்?

கி. க. என்ன ஒன்றும் தெரியாதவன்போல் கேட்கிறாயே. ஊரில் இன்னென்ன இடத்தில் இன்னென்ன விசேஷம் நடக்கிறது என்பது கூடத் தெரியாமல் நீ என்ன உபாத்தியாயம் செய்கிறாய்?

சு. தீ. (அவசரத்துடன்) எவ்விடத்தில் என்ன விசேஷம்?

கி. க. [சுப்பு தீக்ஷதரைக்கவனித்து] பெரியவாள் யாரு? தெரியவில்லையே. எவ்விடத்திலோ பார்த்தது போலிருக்கின்றதே.

சு. தீ. இருக்கலாம். நான் இருப்பது தஞ்சாவூர். சாமிதீக்ஷிதர் குமாரர் .... ....

கி. க. தாங்கள் தான் சுப்பு தீக்ஷிதரோ! பண்ணை கிருஷ்ணசாமி ஐயர் தங்களைப் பற்றி மிகவும் சொன்னார்.

சு. தீ. அப்படியா! .... ஆமாம் சற்று முன்பாக எவ்விடத்திலோ விசேஷம் என்று சொன்னீர்களே? என்ன விசேஷம்?

கி. க. ஒன்றுமில்லை. இந்தத் திங்களூரில் அப்பூதி ஐயர் என்று ஒருவர் இருக்கின்றார். மகா பக்திமான். திருநாவுக்கரசர் என வழங்கும் அப்பரிடம் அதிக பக்தி வாய்ந்தவர். அவர் ....

சு. தீ. பரமசிவன், சூலை நோய்கொடுத்து, அபயம் அளித்தாரே அப் பெரியவாளிடத்திலா?

கி. க. ஆம். ஆம். அவர்தான்.

ச. தீ. ஆகா! இன்று புனிதனானேன். அப்பூதி அடிகள் மிகவும் புண்ணியசாலியாகத்தான் இருக்கவேண்டும்.

நீ. ஸா. தடையென்ன அதில். அவர், அப்பரின்மேல் உள்ள வாஞ்சையினால், தம் மனைவி, மக்கள், ஸ்நேகிதர்கள், முதலிய யாவர்களையும் அவர் பெயரையே இட்டு அழைக்கிறார்.

கி. க. அவர்தான் அப்படியென்றால், அவர் குடும்பத்தார் யாவரும், அந்த அப்பரிடம் வைத்திருக்கும் பேரன்பைச் சொல்லி முடியாது. அவருக்காக உயிரையும் விடுவார்கள். இவ்வளவிற்கும் பாருங்கள், அவரை இன்னும் நேரில் பார்த்ததில்லை.

சு. தீ. அப்படியா! இது மிகவும் ஆச்சரியமே. திருநாவுக்கரசரின் பெயரைக்கேட்ட அளவிலேயே, இத்தகைய காரியங்களைச் செய்கின்றாரே! இன்னும் நேரில் பார்த்தால், அவர் உளம் என்ன தன்மை அடையுமோ தெரியவில்லை. நேரமாகின்றது.

நான் சீக்கிரமே சென்று அப்பூதியைத் தரிசித்துப் பின் என் காரியங்களைக் கவனிக்கிறேன். பாருங்கள். அவரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்ததனால், என் தாக உணர்ச்சியைக்கூட மறந்து விட்டேன்.

கி. க. எல்லாம் பக்திதான் காரணம். இச்சாலையின் சிறிது தூரத்தில் திருநாவுக்கரசர் பெயரால் ஓர் தண்ணீர் பந்தலை அப்பூதி ஏற்படுத்தியிருக்கின்றார். அது எவ்வளவு நன்றாக நடைபெறுகின்றது தெரியுமா! அடாடா! முதல்தரமான வெள்ளரிப்பிஞ்சுகளென்ன! ஒடித்த மாத்திரத்தில் மளுக்கென்று ஒடியக்கூடிய சிறு உறப்புள்ள, மாங்காய்த் துண்டங்கள் என்ன! பலவித சுண்டல்கள் என்ன! நீர்மோர் பானகங்கள் என்ன! ஆஹா! அந்த வைபவத்தை ....

சு. தீ. ச்! ச்! ச்! ஆஹா! சொல்லும்பொழுதே நா ஊறுகின்றது. சீக்கிரமாகச் செல்லுகின்றேன். நமஸ்காரம். (ஓடுகிறார்.)

கி. க. நாளைக்கு மறந்து விடாதீர்கள்.

நீ. ஸா. நம்மையும் கொஞ்சம் ....

சு. தீ. அதென்ன அப்படி நினைத்து விட்டீர்கள் என்னை! முன்னதாகவேவந்து விடுங்கள். பார்த்துக்கொள்ளுகின்றேன்.

கி. க. நீலகண்டா! நாளைக்காலையில், சுப்புதீக்ஷிதர் வலதுகைப் புறம் நாம் இருக்கவேண்டும். என்ன சொல்லுகிறாய்?

நீ. ஸா. அதைவிட வேறு காரியம் நமக்கு என்ன இருக்கின்றது. வாருங்கள் போகலாம். (இருவரும் செல்லல்.)

[காக்ஷி முடிகிறது.]

## காக்ஷி. 2.

இடம் :— திங்களூரின் அருகில் உள்ள ஓர் சாலே.

காலம் :— காலே.

பாத்திரங்கள் :- திருநாவுக்கரசர், சிவநேசர், மற்றும் பல அடியார்கள்.

(திருநாவுக்கரசர் தமது பக்தகோடிகளுடன் ஈஸ்வரபக்தியில் ஈடுபட்டவண்ணம் பாடி வருகின்றார்).

நா. அ. அன்பர்களே! திருப்பழனத்தில் எழுந்தருளியிருக்கும், விரிசடைக் கடவுளான சாக்ஷாத் ஆபத்ஸகாயரை வணங்கினேம். இன்னும் திங்களூர் சிறிது தூரத்தில் தான் இருக்கின்றது. ஆ! அதோ பாருங்கள். அவ்வூரில் உள்ள கோயிலின் அழகில் சிறந்த சிகரத்தை. (யாவரும் அத்திக்கை நோக்கி வணங்குதல்) பக்தசிகாமணிகளே! இதோ இச் சாலேயின் கீழ்புறத்துள்ள காளவாயிலிலிருக்கும் செங்கற்களேப்பாருங்கள். அவைகள் நமக்கு எவ்வளவு அரிய பெரிய விஷயத்தைப் போதிக்கின்றன.

சி. நே. ஸ்வாமி! செங்கற்களா! அரிய பெரிய விஷயமா! அது என்ன? விளங்கச் சொல்லவேண்டும்.

நா. அ. செங்கல் முதன் முதல் களிமண்ணுக இருந்தது. களிமண் எப்படி புல், பூண்டு முதலியன முளேத்தற்குக் காரணமாக இருக்கிறதோ, அதுபோல, நமது சித்தையும் பல நினைவு களின் உற்பத்திக்குக் காரணமாக இருக்கின்றது. களிமண் குயவன் கட்டளேக்கு உட்பட்டு, பச்சைக்கல்லாக மாறி, சூரியனின் வெப்பத்தால் காய்ந்து, பிறகு கட்டைகளால் வெந்து, அக்கினியால் செங்கல்லாகி வீட்டிற்கு உபயோகப் படுவது போல, நமது சித்தையும், பெரியோர் கட்டளேக் குட்பட்டு, ஆசையற்றதாக மாறி, ஞான சூரியனல் உலர்ந்து, சஞ்சித கர்மக் கட்டைகளால் வெந்து, குரு அருளாம் அக்னியால் மெய்ஞ்ஞானச் செங்கல்லாகி,

மோக்ஷ வீட்டிற்கு உபயோகமாகின்றது என்பது நன்கு விளங்குகின்றதல்லவா? நிற்க, அன்பீர்! எடுத்தற்கரிய இம் மானிடப் பிறவியை ஈசனின் ஆக்ஞைப்படி அடைந்த நாம்

"உடம்பினுல் பெற்ற பயன்ஆவ தெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்"

எனப் பெரியோர்கள் உண்மையாய்ச் சாற்றியபடி, இச்சரீரத்திலேயே, மறைந்து நிற்கும், அகண்ட, பரிபூரண, சச்சிதானந்த, சுயம்பிரகாச, ஸாக்ஷாத்கார, சிதாகாச, சொரூப, சின்மயனாகிய உத்தமனும் சாம்பசிவமூர்த்தி யைக் கண்டறிந்து, அவர் தம் திருவடிகளையே சரண் என அடைந்து, அவர் கிருபாநோக்கத்திற்குப் பாத்திரராக வேண்டும். அப்படிக்கில்லையேல், நாம் பிறவிப் பெருங் கடலில் வீழ்ந்து, கரையேற வகையின்றிக் கூற்றுவன் வசப்பட்டு, கொடுமைகளுக்கு உள்ளாக வேண்டும். ஆக லின் மானிடராய்ப் பிறந்த நாம் இப்பிரபஞ்ச வாழ்வினது சாரமற்ற தன்மையை அறிந்து, யாவற்றையும் துறந்து சகல சமயங்களுக்கும் மேம்பட்டது சைவ சமயமே எனத் தெளிந்து, சைவசமயப் பரம்பொருளாய் விளங்கும், எம்பெருமானுடை தூய திருவடிகளை நம் மனத்தில் நிலை நிறுத்திய வண்ணம், சிவபோகத்தையே அனுபவித்துக் கொண்டு நம் வாழ் நாட்களைக் கழிப்போமாக. நேர மாகின்றது. புறப்படுங்கள். (பாடியவண்ணம் செல்லல்.)

[ காக்ஷி முடிகிறது. ]

## காக்ஷி. 3.

இடம் :— திங்களூர் சாலையில் ஓர் தண்ணீர்ப் பந்தல்.

காலம் :— பிற்பகல்.

**பாத்திரங்கள் :— அப்பூதி அடிகள், கங்காதரர், நாவுக்கரசர், அடியார்கள், வழிப்போக்கர்கள்** முதலானோர்.

*(சாலையின் ஓரமாக ஓர் தண்ணீர்ப் பந்தல் வைக்கப்பட்டிருக்கின்றது. அநேக இடங்களில்* **"திருநாவுக்கரசர் அறநீர்ச் சாலை"** *என எழுதப்பட்ட பலகைகள் தொங்கவிடப் பட்டிருக்கின்றன. அடிக்கடி வழிப்போக்கர்கள் தாக சாந்தி செய்து செல்லுகின்றனர். சிறிது நேரஞ்செல்ல, அப்பூதி அந்தணர் ஓர் தயிர்க் குடத்தை எடுத்து வருகிறார்.* **கங்காதரர்** *இதைக் கண்டு வெளியே ஓடி வருகிறார்.)*

கங். *(பானையை இறக்கிவைத்துப் பின்) ஆ! தாங்கள் இந்தக் காரியத்தைச் செய்யலாமா! "அப்பூதி அய்யர், இத்தகைய காரியம் செய்வதை, நீ எவ்வாறு பார்த்துக்கொண்டிருக்கலாம்" என, என்னையன்றோ தெருவில் ஏசுவர். எதற்காக இவ்வளவு சிரமம். இது தாங்கள் செய்யக்கூடிய பணி அல்லவே.*

அப். *கங்காதரரே! தரும கைங்கரியம் செய்யவுமா வெட்கம்! வீட்டில் அதிகமாகத் தயிர் இருந்ததனால், அடியார்களுக்கு உபயோகப்படுமென்று எடுத்து வந்தேன்.*

கங். *அந்த அடியார்களின் பணியை நான்தான் தங்கள் பொருட்டுச் செய்யக் காத்திருக்கின்றேனே.*

அப். *அப்படியல்ல. ஒவ்வொருவனும் தன் சக்திக்கு ஏற்றவாறு அடியார் பணியைச் செய்யவேண்டும். ஐயா! பசுவின் உடம்பெல்லாம் பால் நிறைந்ததேனும் அது மடியில்தானே சுரந்து கொடுக்கும். அதுபோல பரமன் சராசரமாய்ப் பற்றி நிறைந்தாலும், அவர் அடியார் மூலமாகத்தான் அருள்*

அளிப்பார். அன்பரே! சிவத்தை உணர்ந்தோரது சரீரமே கோயில். அவருக்கு ஸ்நானம் செய்வித்தலே அக்கோயிலுக்கு திரு அலகு இடுதலாம். அவருக்கு உடை உதவுதலே அக்கோயிலுக்கு நீறு பூசுதலாம். அவருக்கு அமுது செய்வித்துப் பசியைப் போக்குதலே அக்கோயிலைப் பழுது பார்ப்பதாம். அவர் தாகம் நீங்கிடத் தண்ணீர் தருதலே, அக்கோயிலை மெழுக்கிடுதலாம். இவ்வாறு செய்யும் அடியார் பணியே அரன்பணியாகும் என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். ஆதலின் நான்செய்த இந்த சிறு பணிக்கு நீங்கள் பெரிதும் வருந்துவது முறையல்ல.

கங். மன்னிக்கவேண்டும்! இன்று தான் இந்த அரிய விஷயத்தைத் தங்களிடமிருந்து உணர்ந்தேன்.

அப். சரி! பூஜைக்கு நேரமாகின்றது. புஷ்பங்கொய்ய தோட்டத்திற்குச் சென்ற நமது குழந்தை மூத்த திருநாவுக்கரசு இன்னும் வரவில்லை. ஆதலால் நானே போய் அவனை அழைத்துச் செல்லுகின்றேன். (செல்லல்.)

(தண்ணீர் ஊற்றும் அந்தணர் தயிர்ப் பானையை உள்ளெடுத்துச் செல்லுகின்றார். சிறிது நேரஞ்செல்ல **திருநாவுக்கரசர்** தம் பக்தகோடிகளுடன் ஈசனைப் பாடிய வண்ணம் அங்கு வருகின்றார்.)

நா. அ. பக்தர்களே! இவ்விடத்தில் சற்று அமர்ந்து இத்தண்ணீர்ப் பந்தலில் சிறிது நீர் அருந்திச் செல்வோம்.

(அடியார்கள் வருகையை அறிந்த கங்காதரர் வாயிற்புறம் வருகிறார்.)

கங். பெரியோர்களே! வரவேண்டும். இந்நிழலில் அமர்ந்து தாகசாந்தி செய்து கொள்ளுங்கள்.

நா. அ. (வணங்கி) அன்பீர்! அகமகிழ்வுற்றோம். இந்தக் கோடை காலத்தில், இத்தகைய இடத்தில் இந்த அறநீர்ச்சாலையை அமைத்த புண்யசீலர் யாவர்?

கங். ஸ்வாமி! இத்திங்களூரில் வசிக்கும் அப்பூதி என்னும் ஓர் அந்தணர்.

நா. அ. ("திருநாவுக்கரசர் அறநீர்ச்சாலை" என எழுதப்பட்ட பலகைகளை உற்றுநோக்கித் தனிமையில்) ஆஹா! இதென்ன வியப்பாக இருக்கின்றது. நம்மை முன் பின் அறியாத ஒருவர், இவ்வாறு நம்பெயரால் தருமம் செய்வதற்கு என்ன காரணம். இல்லையேல் அப்பெரியாருக்கும் ஒருக்கால் திருநாவுக்கரசு என மற்றொரு பெயர் இருக்குமோ அல்லது என் பெயர்கொண்ட வேறு அடியாருமுண்டோ? இவ் விஷயம் எனக்கு நன்கு புலப்படவில்லை. இவரையே கேட்டுத் தெரிந்துகொள்வோம். (வெளிப்படையாக) ஐயா! அவருக்கு அப்பூதி என்னும் பெயராமேல் வேறொரு நாமத்தை என் எழுதியிருக்கின்றார்?

கங். ஐயா! சைவமதத் திலகமணியாகிய அந்தத் திருநாவுக்கரசர்மேல் உள்ள அன்பினால் அப்பெயரை இத்தண்ணீர்ப் பந்தலில் எழுதியிருக்கின்றார். இதுமாத்திரமல்ல. இன்னும் தோட்டம், துறவு, பாத்திரம், பண்டம், ஆடு, மாடு, மக்கள் முதலிய யாவரையும் "திருநாவுக்கரசு" என்றே அழைப்பார்.

நா. அ. சம்போ! - உத்தமரே! தாங்கள் கூறிய அந்த பிராமணோத்தமர் எவ்விடத்தில் வசிக்கின்றார்?

கங். சந்நிதித் தெருவில் வசிக்கின்றார்.

நா. அ. அப்படியா! மிகவும் சந்தோஷம்! அத்தகைய பெரியாரைச் சடுதியில் தரிசிக்க பெரும் ஆவல் உண்டாகின்றது. யாம் சென்று வருகின்றோம்.

கங். யாவரும் தாகசாந்தி செய்துகொண்ட பின்னரே செல்ல வேண்டுகின்றேன்.

நா. அ. நண்பரே! உமது இனிய செய்கைகளால், நாங்கள் யாவரும் சந்தோஷம் அடைந்தோம். தங்களைத் திருப்தி செய்யவும், எங்களின் தாகத்தைத் தணித்துக்கொள்ளவும், நாங்கள் காத்திருக்கின்றோம். (அந்தணர், யாவர்க்கும் நீர் அளித்த பின்னர்) அந்தணரே! சென்று வருகின்றோம்! பக்தர்களே! புறப்படுங்கள். நாம் இன்று ஓர் பெரியாரைத் தரிசிப்போம்.

(அந்தணரை வணங்கி நாவுக்கரசர் பாடிக்கொண்டே செல்லல்.)

## (திரு அங்க மாலை.)

தலையே நீவணங்காய் — தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத் தலையே நீவணங்காய்.

கண்காள் காண்மின்களோ — கடல் நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான்றன்னைக் கண்காள் காண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ — சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்றிற மெப்போதுஞ் செவிகாள் கேண்மின்களோ.

* * * *

கைகாள் கூப்பித்தொழீர் — கடி மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக் கைகாள் கூப்பித்தொழீர்.

[ காக்ஷி முடிகிறது. ]

## காக்ஷி. 4.

இடம் :— அப்பூதி அந்தணரின் பூஜாக்கிரஹம்.

காலம் :— காலை.

**பாத்திரங்கள் :— குணவதி, வாக்கீசன், சுந்தரம், அப்பூதிஅடிகள், மூத்த திருநாவுக்கரசு, திருநாவுக்கரசர் சிவநேசர்** *முதலிய அடியார்கள்.*

(**குணவதி,** *சிவபெருமான் சந்நிதியின் முன்பு கோலமிட்டுக் கொண்டிருக்கின்றனர்.* **வாக்கீசன்** *சந்தனம் அரைத்துக் கொண்டிருக்கின்றான். வீட்டுச்சுயம்பாகி* **சுந்தரம்** *விபூதி ருத்ராக்ஷம் அணிந்தவனாய்ப் பிரவேசித்தல்.*)

சுந். *அம்மா! இன்று என்ன சமையல் செய்கிறது?*

குண. *சுந்தரம்! ஆத்தில் என்னென்ன காய்கறிகள் இருக்கின்றன என்பதைப் பார்த்துவாருங்கள்.*

சுந். *பார்த்து வருகின்றேன்.* (*உள்ளே செல்லல்*)

வாக். *அம்மா! நான் சந்தனம் அரைத்து விட்டேன்.*

குண. *மிகவும் சந்தோஷம். நீ நல்ல பையன்.*

வாக். *அப்பா ஏன் இன்னும் வரவில்லை அம்மா!*

குண. *வந்துவிடுவார். இது என்ன இன்னும் உன் தமையன் மூத்த திருநாவுக்கரசு வரவில்லை. புஷ்பம் கொய்யச் சென்று வெகு நேரமாயிற்றே.* (*சுந்தரம் பிரவேசம்*)

சுந். *போய்ப்பார்த்தேன். வாழைக்காய், பொடலங்காய், கத்தரிக்காய் இவைகள் தான் இருக்கின்றன. மேலும் இப்பொழுது ஒரு சாக்குக் கருணைக்கிழங்கும், ஒரு கூடை, சேப்பங்கிழங்கும் வந்தன. அவைகளையும் வாங்கி வைத்திருக்கின்றேன்.*

குண. சுந்தரம்! தண்ணீர்ப் பந்தலுக்குச் சென்றவர் இன்னும திரும்பி வரவில்லையே. வந்தால் அவரைக் கேட்டு சமைய லுக்கு ஏற்பாடு செய்யலாம் என்றிருந்தேன். நாழிகை ஆய்விட்டது. சரி. பொடலங்காய் பொறிச்ச குழம்பு, கத்தரிக்காய் கறி, வாழைக்காய் வறுவல், செய்துவிடு. இவைகளெல்லாம் அவருக்குப் பிடிக்கும்.

சுந். அப்படியே செய்கிறேன். இருந்தாலும் ஒரு விண்ணப்பம். நம் ஐயரவாளுக்குக் கருணைக்கிழங்கு தொகையலில் அதிகப் பிரியம். ஆதலால் அதையும் செய்ய உத்தரவாகவேண்டும்.

குண. ஆமாம். அதனையும் செய்துவிடுங்கள். ஐயோ! இன்னும் வரவில்லையே. அவர் திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்த லுக்கு இன்று தாமே தயிர்க் குடத்தை எடுத்துச்சென்றார்.

சுந். அம்மா! நான் அக்குடத்தை எடுத்துச் செல்லுகின்றேன் என எவ்வளவோ தெரிவித்தும், மறுத்துத் தாமே எடுத்துச் சென்றார்.

குண. அப்படியா! சரி. அவர் வருவதற்குள் சமையலைச் செய்து விடுங்கள்.

சுந். ஒரு நொடியில் முடித்து விடுகின்றேன். (உள்ளே செல்லல்)

வாக். ஏன் அம்மா, நம்ப அப்பா யாவரையும் திருநாவுக்கரசு என்று அழைக்கிறாரே, அவர் யார்? எந்த ஊரில் வசிக் கின்றார்?

குண. குழந்தாய்? அவர் ஒரு ஊரிலும் தரித்திரார். சதாகால மும் சிவாலயங்களைத் தரிசித்துப் பரமனைப் பாடிப்பரவுவார்.

வாக். அம்மா! அவர் நம்மை யெல்லாம் அறிவாரோ?

குண. அப்பா! நாங்கள் அவருடைய அற்புதச் செயல்களைக் காதுகுளிரக் கேட்டுக் களிப்படைந்தோமே தவிர, கண் குளிரக்கண்டு அவருக்குப் பணிசெய்யும் பெரும் பாக்கியத் தைப்பெற்றோம் இல்லை.

வாக். அவர் செய்த அற்புதச் செயல்கள் என்ன அம்மா?

குண. வாக்கீசா! அவைகளை விவரித்துச் சொன்னால் மிகவும் பெருகும். ஆயினும் சுருக்கமாகக் கூறுகின்றேன் கேள். ஒரு சமயம் நீற்றறையில் சமணர்களால் ஏழு நாட்கள் இடப்பட்டும், யானையின் காலினால் இடறப்பட்டும், பாலில் விஷம் கலந்து ஊட்டப்பட்டும், கல்தூணில் கட்டிக்கடலில் தள்ளப்பட்டும், தம் திருமேனியில் சிறிதும் துன்பமுறாது சிவபக்தியின் சக்தியால் சிறந்து விளங்கினர். அதனால் மேன்மையுற்றார்.

வாக். ஆஹா! இத்தகைய பெரிய ஸ்வாமிகள் நம் ஆத்திற்கு எப்பொழுது வருவார்?

குண. குழந்தாய்! கூடிய சீக்கிரம் வருவார்.

வாக். அம்மா! இன்னும் ஏன் அப்பாவும் மூத்த திருநாவும் வரவில்லை? நான் ஓடிப்போய் அவர்களை அழைத்துக்கொண்டு வந்து விடவா?

குண. வேண்டாம். அவர்கள் வரும் நேரமாய் விட்டது.

வாக். (குதித்துக்கொண்டே) அம்மா! அம்மா!! அப்பாவும் அண்ணாவும் இதோ வருகிறார்கள். (மூத்த திருநாவு குடலையில் புஷ்பத்துடன், அப்பூதி அடிகள் தொடரப் பிரவேசித்தல்.) அண்ணா! உனக்கு வயது நூறு.

குண. திருநாவு! புஷ்பம் பறித்துவர ஏன் இவ்வளவு நேரம்?

மூ. தி. அம்மா! நமது நந்தவனத்தின் வேலிகளை யெல்லாம் ஒரு காளை முறித்து விட்டது. ஆகலால் அதனைச் சீர்படுத்திப் பின்னர் இப்புஷ்பங்களைக் கொய்துவர இவ்வளவு நாழியாகி விட்டது. நல்லவேளை. அப்பா சமயத்தில் தோட்டத்திற்கு வந்து உதவி செய்தார். இல்லையாயின் அந்த மாடு என்னைக் கிழித்துக் கொன்றிருக்கும்.

வாக். அதனால்தான் அப்பாவுக்கும் இவ்வளவு நாழி.

அப். குணவதி! காளைமாடு முட்ட வந்ததனால் நம் மூத்த திருநாவு பெரிதும் பயந்துவிட்டான். ஆயினும் பரம பக்தரான நமது குலகுரு திருநாவுக்கரசரின் தூய நாமத்தை மனதில் நினைத்தவண்ணம் அவன் நெற்றியில் சிறிது விபூதியை இடுவாய்.

குண. அப்படியே செய்கின்றேன். (விபூதியை எடுத்து நெற்றியில் இடுகிறாள். "நமப்பார்வதி பதயே - ஹர ஹர மஹாதேவா! திருச்சிற்றம்பலம் - சித்சபேசா" என வாயிற்புறத்தில் பக்தகோடிகளின் ஆரவாரம் கேட்கின்றது)

மூ. தி. அப்பா! நம் வீட்டு வாசலில் யாரோ சில பக்தர்கள் வந்திருக்கிறார்கள்.

அப். ஆம்! நானே சென்று அவர்களை அழைத்து வருகின்றேன். [செல்ல எத்தனிக்க, திருநாவுக்கரசர் அடியார்களுடன் வணங்கிய வண்ணம் எதிர்வரக்கண்டு, அவரை வணங்கி] சாம்பசிவ பக்தரே! வருக! வருக! நக்ஷத்திர மண்டலங்களுக்கிடையே பிரகாசிக்கும் குளிர்ந்த சந்திரனைப்போல் இதோ இப்பெரியார்களுக்கு இடையே சிவவடிவாய்த்தோன்றும் தாங்கள், யாராக இருந்தபோதிலும் சரி, அடியேன் கிரகத்திற்கு விஜயம் செய்ததைப்பற்றி மிகவும் சந்தோஷம்.

நா. அ. அன்புடையீர்! தாங்கள் கூறும் பெருமைச் சொற்களுக்கு நாயேன் சிறிதும் உரியனல்லன். உத்தமரே! நாங்கள் திருப்பழனத்து ஈசனை வணங்கிவிட்டு, இவ்வூருக்கு வரும்போது, வழியோரத்தில் தாங்கள் வைத்திருக்கும் சிறந்த தண்ணீர்ப்பந்தலைக் கண்டோம். மேலும் தங்களுடைய மற்ற தரும குணங்களைக் கேள்விப்பட்டு மகிழ்ச்சி கொண்டு, தங்களைத் தரிசித்துச் செல்ல வந்தோம். அவ்விஷயமாக அடியேன் தங்களிடம் சில கேட்க விரும்புகின்றேன். தங்களுடைய சித்தமெப்படியோ?

அப். ஸ்வாமி! தங்கள் இஷ்டப்படி செய்யக் காத்திருக்கின்றேன்.

நா. அ. (அறுசீர் விருத்தம்.)

சிவனடியார் முதற்பலரும் தங்கியிளைப் பாறுதற்குத்
தெண்ணீர்ப் பந்தர்
உவகையுடன் நீரமைத்த நேர்மைதனை யாம்கண்டிங்
குளமகிழ்ந்தோம்
தவமுனிவ! ஆயினும்அவ் வயினும்பேர் வரையாதே
தனியாம் வேறோர்
நவமிகுநா மம்வரையக் காரணமென் எமக்கதனை
நவிலுவீரே!

பெரியீர்! தாங்கள், சிவனடியார்கள் இளைப்பாறும்படி வைத்திருக்கின்ற பெருமை பொருந்திய தண்ணீர்ப் பந்தலில் தங்களுடைய திருப்பெயரை எழுதாமல் வேறொரு பெயர் எழுதியதின் நோக்கம் யாதோ? தயை செய்ய வேண்டும்.

அப். ஹா! ஹா! என்ன தெரிவித்தனை! சண்டாளச் சமணருடன் சேர்ந்திருந்த பல்லவராஜன் செய்த கொடுமைகளைச் சிவபக்தியின் வல்லமையால் நீக்கி, இம்மையிலும் சிவனருள் பெறலாம், என உலகுக்கு விளக்கிக் காட்டிய அவ்வாக்கீசரின் பெயரோ மற்றொரு பெயர்! எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாயும், சைவ சமயத்திற்குச் சிறப்பாயும் அமைந்துள்ள விபூதியையும், சகல பாபங்களையும் நீக்கும் பரிசுத்தமான ருத்திராக்ஷத்தையும் அணிந்துள்ள நீ அவருடைய திருப்பெயரை, உன் நாவினாற் கூட உச்சரிக்க மனம்பொறாது, வேறொரு பெயர் எனக் கூறி இகழ்ந்தது உன் வேஷத்திற்குத் தகுந்தபடி இல்லையே! இவ்வுலகில் திருநாவுக்கரசரின் மகிமையையும் அறியாத சிவனடியாரும் உளரோ! பரமசிவனைப் பண்புடன் பக்தி செய்தலே இம்மையில் உய்யும்வழி என்பதை என் போன்ற மூடர்களும் அறியும்பொருட்டுத் திருவருள்புரிந்து,

"ஜீவகாருண்யம், பாசவைராக்யம், ஈஸ்வரபக்தி, ஆன்ம ஞானம்" நிறைந்த சைவமதத் திலகமணியாகிய, என் அப்பன், என் ஐயன், பரமதூயன் பெருமை பொருந்திய திருப்பெயரை யான் எழுதியிருக்க, அதை நீ சிறிதும் யோசியாமல், அஞ்சலி செய்தற்குரிய அத்திருப்பெயரையும் உன் நாவினுல் கூறுது என் எதிரிலேயே "வேறொரு பெயர் எழுதியதின் நோக்கம் யாதோ" என்று கேட்க உனது நா எப்படி இடந்தந்தது?

நா. அ. ஈசனே! என் மனம் தடுமாறுகின்றது! அடியேனை இவ்வாறு கலங்கச்செய்ய வேண்டாம்.

அப். கற்றூணில் கட்டப்பட்டுக் கடலில் தள்ளப்பட்ட போதினும், சிவனருட் பற்றினுல் மிதந்துகொண்டு, கரை ஏறிய என் அப்பரது வன்மையை உலகத்தில் யார்தான் அறியமாட்டார்! இதையெல்லாம் அறியாது இச்சிவ சின்னங்களோடு என் முன் நின்று, தகாத வார்த்தையைக் கேட்ட நீ யாவன்? உறையிடம் யாது? சடுதியில் உரைப்பாய்?

நா. அ. பக்தியிற்சிறந்த பிராமணோத்தமா! அடியேனை மன்னிக்க வேண்டும். சமணர்களுடைய கபடமார்க்கப் படுகுழியினின்றும், வெளியேறும் பொருட்டு, பரமசிவனுல், சூலை நோய் உண்டாக்கி, அவரால் பின்னர் ஆட்கொள்ளப் பெற்ற, உணர்வில்லாத அந்நாவுக்கரசுன் யானே. (நமஸ்கரிக்க, அப்பூதி அடிகளும் நமஸ்கரிக்கின்றூர்.)

அப். (எழுந்து) ஆ! ஆ! மஹா அபராதியானேன்!

("நந்தா நீ சிவபக்தன்" என்ற மெட்டு)

வெண்ணீறு பூசிய தூயா — புகழ்
விண்ணவர் மண்ணவர் போற்றிடும் நேயா [வெ]
நானிலம் புகழ்ஜம்பு நாதா — அருள்
நாவுக்கரசரே நாயேன் மேல் வாதா [வெ]
அன்புரு வாயமைந்தோரே — சற்றும்
என்பிழை எண்ணுமல் எற்றருள் வீரே [வெ]

பிரபோ! தேவரீரைத் தாழ்மைப்படுத்திப் பேசிய இச்சண்டாளன், இன்னமும் உயிருடன் நிற்கின்றேனே! கருணைக் கடலே! பொறுமைத் திருஉருவே! அடியேனை மன்னித்தருளவேண்டும். (காலில் வீழ்கின்றார் - இருவரும் எழ) கண்டேன்! கண்டேன்! கலிவிண்டேன்! களிகொண்டேன்! இனி ஒன்றும் வேண்டேன்! பக்தசிரேஷ்டரே! அடியேன் உய்யும் மார்க்கத்தை இனி தாங்கள்தான் தெரிவிக்க வேண்டும். இந்நாள் பரியந்தம் தம்முடைய திவ்ய தரிசனத்தை என்று காண்பேன் என ஏங்கியிருந்தேன். அடியேனது பூர்வ புண்ணியமே இன்று தங்களை இவ்விடத்தில் சேர்த்தது.

நா. அ. அப்படிஅல்ல. அடியேன் செய்த பாக்யமே தம்மை இன்று தரிசிக்கச் செய்தது.

அப். ஆலமுண்ட சீலரின் நேசனே! ஒரு சந்தேகம். தங்களுக்குக் கருங்கடலிலிருந்து கரையேறியது அரிதாய் இருந்ததோ? அல்லது சமணமத இருட்கடலினின்றும் கரை ஏறியது அரிதாய் இருந்ததோ? திருவாய்மலர்ந்தருள வேண்டும்.

நா. அ. சிரேஷ்டரே! அவரவர் சமயமே அவரவர்களுக்கு உரியது. நமக்கு உரியதல்லாத அச்சமண சமயத்தில், அடியேன் அறிவீனமாய்ச் சார்ந்ததால் சூலைநோயால் கஷ்டமடைந்தேன். பின்னர் எம்பெருமானால் ஆளப்பெற்றேன். ஆதலின் அருகர் சமயத்தினின்றும் கரை ஏறியதே அடியேனுக்குப் பெரிதாயிற்று.

அப். ஸ்வாமி! வஞ்சகம் நிறைந்த சமணர்கள் நீற்றறையில் தம்மைப் புகுத்தியபொழுது எவ்வாறு அத்துன்பத்தைத் தாங்கள் சஹித்தீரோ! அதைநினைக்க அடியேன் மனம் பரிதபிக்கின்றதே!

நா. அ. உத்தமரே!

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

அச்சமணர்கள் என்னை நீற்றறையில் தள்ளியபொழுது, உற்ற ஈசனின் திருவடியே கதியென முற்றும் என்னை மறந்தேன். அதுகாலை அந்நீற்றறை, குற்றமற்ற வீணையைப் போன்றும், மாலைச் சந்திரனைப் போன்றும், வீசுகின்ற தென்றலைப் போன்றும், இளவேனிலைப் போன்றும் தாமரைத் தடாகத்தைப் போன்றும், குளிர்ந்ததை உணர்ந்தேன். ஆகவே துன்பம் விளைத்ததாக எண்ணிய அச்சமணர்களின் செய்கை எனக்கு ஈசனின் திருவடி நிழலின் இன்பம் விளைத்ததாக முடிந்தது.

அப். ஆஹா! ஸ்வாமி! பாதகர்களாகிய சமணர்கள், தங்களைக் கல்லோடு சேர்த்துக் கயிற்றினால் கட்டிக் கடலில் தள்ளினார்களே! அதைத்தாம் எவ்வாறு ஏற்றுக்கொண்டீரோ!

நா. அ. பிரியரே!

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பெரியீர்! சமுத்திரத்திலே தள்ளிவிடப்பட்ட யான் என் செயலால் ஆவது யாதொன்றுமில்லை, என எண்ணி ஸ்வாமியை ஸ்தோத்திரம் செய்தேன். அவரது அருளால் கல் தெப்பமாக மிதந்தது. கட்டிய கயிறு அறுந்ததுமின்றி அடியேனையும் திருப்பாதிரிப்புலியூரில் சிவனடியார்களுக்கிடையே சேர்த்தது. (தனது அடியார்களை நோக்கி) அன்பர்களே! இப்பெரியாரின் பக்தியின் நிலையைக் கவனியுங்கள்.

அப். புண்யசாலிகளே! அமருங்கள். (யாவரும் அமர திருநாவுக்கரசர் விபூதி அளிக்கின்றார்) ஸ்வாமி! இவன்தான் அடியேன் மூத்த மைந்தன். மூத்த திருநாவுக்கரசு என்று பெயர். (இளையவனைச் சுட்டிக்காட்டி) இவன் எளியேனது இரண்டாம் மைந்தன். வாக்கீசன் என அழைப்போம்.

நா. அ. எளியேன் பெயரை இவர்களுக்கு அளித்தது, அடியேனிடத்தில் தமக்குள்ள அன்பே காரணம். ஈசன் அருள் தம்மிடம் நிலைத்திருக்கின்றது.

அப். எல்லாம் தங்கள்மீதுள்ள பக்தியே காரணம். ஸ்வாமி! நாழியாகின்றது. ஆதலால் யாவரும் இவ்விடத்திலேயே அன்னம்கொள்ள வேண்டுகின்றேன்.

நா. அ. அப்படியே செய்கிறோம். அந்தணரே! சமையல் சித்தமாகட்டும். அதற்குள்ளாக நானும், எனது நண்பர்களும் அருகிலிருக்கும் திருக்கோயிலுக்குச் சென்று ஸ்ரீ கைலைநாதரைக்கண்டு, சேவித்து வருகின்றோம்.

அப். சரி! சர்வேஸ்வரனை வணங்கிச் சடுதியில் வந்துவிடுங்கள்.

நா. அ. அன்பிற்சிறந்த நண்பர்களே! என்னுடன் வாருங்கள். அருகிலிருக்கும் திருஆலயத்திற்குச் சென்று வருவோம்.
(திருநாவுக்கரசும் ஏனையோரும் செல்லல்.)

அப். பெண்ணே! திருநாவுக்கரசருக்கு அறுசுவையோடு அமுது செய்விக்கச் சீக்கிரமே ஏற்பாடு செய். அவர்கள் இவ்விடத்திற்கு வருவதற்குமுன் சமையல் தயாராகவேண்டும்.

குண. இது என்ன பிரமாதம்! ஒருக்ஷணத்தில் எல்லாம் சித்தப்படுத்துகின்றேன். வாக்கீசா! சுந்தரமையரைக் கூப்பிடு!

வாக். (அங்கிருந்தபடியே) சுந்தரமாமா! சுந்தரமாமா!

சுந். (உள்ளிருந்தபடியே) ஏன்?

வாக். அப்பா அழைக்கின்றார்.

சுந். இதோ வந்தேன். (கையில் ஓர் கரண்டியுடன் பிரவேசித்தல்.)

அப். சமையல் ஆயிற்றோ?

சுந். அப்பொழுதே செய்துவிட்டேன். கடுகு தாளிக்க வேண்டியதுதான் பாக்கி.

அப். எத்தனை பேருக்கு?

சுந். நம்பாத்துப்பேரைத் தவிர கூட இரண்டு பேருக்குக்காணும். இன்னும் எவ்வளவு பேருக்குச் சமையல் செய்யவேண்டும் என்று உத்தரவு ஆகிறதோ, அதையும் செய்ய அடியேன் காத்திருக்கின்றேன்.

அப். சுந்தரம்! இன்று, நமது கிரகத்திற்குத் தெய்வீகத் தன்மை வாய்ந்தவரும், நம் குலகுருவுமாகிய திருநாவுக் கரசு ஸ்வாமிகள் சில பக்தர்களுடன் விஜயம் செய்திருக் கின்றார்.

சுந். யார்! யார்!! திருநாவுக்கரசு ஸ்வாமிகளா! நான் அவருக்குக் கைங்கர்யம் செய்ய பூர்வஜன்மத்தில் என்ன புண்ணியம் செய்திருக்கவேண்டும்! எஜமான்! அப்பெரியோர் எங்கே?

அப். கோயிலுக்குச் சென்றிருக்கின்றார். ஆதலால் அவர்கள் வருவதற்குள்ளாக திவ்யமான சமையல் ஆகவேண்டும். பாயஸம் வைக்க மறந்து விடாதீர்கள்.

சுந். நன்றாருக்கு! இதையெல்லாம் தாங்கள் சொல்லவேண்டுமா என்ன! இன்னும் சற்றுநேரத்தில் இலைபோட்டு விடுகின் றேன் பாருங்கள். (உள்ளே வேகமாகச் செல்லல்)

அப். குணவதி! சமையலுக்கு விசேஷ சாமான்கள் யாவும் இருக்கின்றனவா? அல்லது ஏதாவது வாங்கிக்கொண்டு வரட்டுமா?

குண. யாவும் இருக்கின்றன. ஆயினும் வந்திருக்கும் பக்தர்களுக்கு அமுது செய்விக்க வாழைக்குருத்துகள் வேண்டும்.

மூ. தி. குருத்து இலைகள் எதற்காக அம்மா?

குண. அப்பா! முற்றிய இலை விரிந்திருக்குமாதலால், அதனில் பக்ஷிகள் எச்சமும் மற்ற அசுத்தங்களும் சேர்ந்திருக்கும். குருத்து இலை சுருண்டு இருப்பதால் அது யாதொரு அசுத்தமுமின்றி சுத்தமாக இருக்கும். ஆகையால்தான் குற்றமற்ற திருநாவுக்கரசு ஸ்வாமிகளுக்குக் குருத்து இலைகள் வேண்டுமென்கிறேன்.

மூ. தி. அப்படியா! இதோ நமது வாழைத்தோட்டத்திற்குச் சென்று வேண்டிய குருத்து இலைகளை நறுக்கி வருகின்றேன். கவலைப்படாதீர்கள்.

குண. சரி. உள்ளே போய் அரிவாளை எடுத்துச்சென்று சீக்கிரமாக இலைகளை நறுக்கிவா.

மூ. தி. (அரிவாளை எடுக்கத் திரும்புகையில், தடுக்கிக் கீழே விழுகிறான்.) ஸ்-ஸ்-ஸ்! அப்பா!

அப். ஹா! (தூக்கி) அப்பா! மெல்லச் செல்லலாகாதா! ஏதாவது அடிவிழுந்ததோ?

மூ. தி. அதெல்லாம் ஒன்றுமில்லை அப்பா! நீங்கள் கவலைப்பட வேண்டாம். இதோ ஒரு நொடியினில் இலைகளைக்கொண்டு வருகின்றேன். (ஓடுகிறான்)

குண. வாக்கீசா! நாம் வழக்கமாக வாங்கும் கடைக்குச்சென்று நல்ல பழங்களாக இரண்டு சீப்பு வாழைப்பழங்களை வாங்கிவா.

வாக். சரி! வாங்கி வருகின்றேன். (ஓடுகின்றான்)

அப். பெண்ணே! இலை சீக்கிரம் போடவேண்டிய ஏற்பாடுகளைச் செய். நானும் மாத்தியான்னிகத்தை முடித்துவிட்டுப் பூஜைக்கு மடிஜலம் கொண்டுவருகின்றேன்.

குண. அப்படியே. (உள்ளே செல்லல் - அப்பூதி கிணற்றிற்குச் செல்லல்)

[ காக்ஷி முடிகிறது. ]

## காக்ஷி. 5.

இடம் :— அப்பூதி அடிகளின் வாழைத்தோட்டம்.

காலம் :— பகல்.

பாத்திரங்கள் :- கூற்றுவன், மூத்த திருநாவுக்கரசு, முதலியோர்.

( கூற்றுவனின் தோற்றம் )

கூற். நான்முகனால் சிருஷ்டிக்கப்பட்ட சகல ஜீவகோடிகளுடைய உயிர்களை, அவ்வேதனின் ஆக்ஞைப்படி எவ்வெக்காலத்தில் எங்கெந்த உயிரை வைவசுதப்பட்டிணத்திற்கு அழைத்துச் செல்லவேண்டுமோ, அதன்படியே யான் இந்நாள்வரை செய்து வருகின்றேன். மகாபாபம் செய்தவர்களின் உயிரை என் கிங்கரர்கள் மூலமாகவும், அதிபுண்ணியசீலர்களின் உயிரை யானே நேராகவும் வந்து அழைத்துச் செல்லுவேன். அதேபோல் இவ்வூரில் வசித்துவரும் அந்தணர் குலதிலகராகிய அப்பூதியின் மூத்த குமாரனுக்கு இன்றோடு ஆயுள் முடிவடைகின்றது. அதனால் இன்றைக் காலைமுதல் அவன் உயிரை அடைய முயன்றும் இதுகாறும் முடியவில்லை. இன்று காலையில் ஒரு ரிஷபத்தின் மூலமாக அவனைக்கொன்று, உயிரைக்கவர்ந்து செல்லலாமென எத்தனிக்கையில், சிவபக்தரான அவன் தந்தை அப்பூதி அடிகள் அருகில் வந்ததால், யான் வெருள நேர்ந்தது. என் நல்ல காலத்திற்கேற்ப, இப்பொழுது அவனே தனியாக இத்தோட்டத்திற்கு இலைகள் அரிய வருவதால், நம் பணியைச் செய்துமுடிக்கலாம். இப்பொழுதே நாம் ஒரு பாம்பாக மாறி, அவன் இலைகளை அறுக்கும் சமயம் பார்த்துத் தீண்டி, அதன்மூலமாக அவன் உயிரைக் கவர்ந்து செல்வோம். ஹா! அதோ அச்சிறுவனும் வருகின்றான். (திடீரென மறைந்து, பாம்பாகமாறி, இலைகளின் இடையே தன்னை ஒளித்துக்கொள்ள, மூத்த திருநாவுக்கரசு இலை அறுக்கும் கத்தியுடன் பிரவேசித்தல்)

மூ. தி. ஆஹா! பக்தர்களுக்கென்றே இவ்வாழை மரங்களில் இவ்வளவு அழகான குருத்துக்கள் இருக்கின்றனபோலும்! இதற்குக்காரணம் அத்திருநாவுக்கரசு ஸ்வாமிகளின் அருள் என்பதற்கையமுண்டோ! சரி நேரமாகின்றது. இனி இலைகளை அரிந்துகொண்டு சீக்கிரமாகச் செல்வோம் (இரண்டு மூன்று குருத்துக்களை அரிந்தவுடன் அரவத்தால் தீண்டப்படல்) ஹா! ஐயோ! அம்மா! (குதித்து முன்வந்து தன்கையில் உதிரம் வடிவதையும், அதற்குக் காரணமான சர்ப்பத்தையும் கண்டு திகில் கொண்டு) ஐயோ! இப்பாழும் அரவம் என்னைக் கடித்து விட்டதே! இனி என் உயிர் நில்லாதே! ஆ! அம்மா! என் தலை சுழல்கின்றது. இந்த இலைகளை உம்மிடம் யார்கொண்டு சேர்ப்பார்கள்! என்ன செய்வேன்! எங்கள் அகத்திற்கு வந்திருக்கும் திருநாவுக்கரசர் காத்துக்கொண்டிருக்க நேரிடுமே! ஹே தருமதேவரே! உமக்கு இரக்கம் என்பது சிறிதாவது இருக்குமானால், நான் இவ்விலைகளை என் தாயிடம் சேர்க்கும் வரையிலாவது எனக்கு உயிர்ப்பிச்சை யளிக்கவேண்டும். (இலைகளைக் கையில் எடுத்துக்கொண்டு) ஆ! என் கால்கள் தடுமாறுகின்றனவே! நா உலர்வதுமின்றி, என்னையுமறியாமல் ஏதோ ஒருவிதமான மயக்கம் என்னைத் தள்ளாடச் செய்கின்றதே! என் குலகுருவே! திருநாவுக்கரசே! அபயம்! அபயம்! ஐயோ! விஷம் சிரசிற்கேறிவிட்டது. கண்களோ மறைக்கின்றன. மார்பை அடைக்கின்றது. எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே. ஆ! பூர்வ ஜன்மத்தில் யான் செய்ததீவினை இத்தகைய பெரியார்களின் தொண்டிற்குக்கூட என்னை உதவாமற் செய்ததோ! ஹே! ஆபத்பாந்தவா! அநாத இரக்ஷகா! அடியவர்களைச் சடுதியில் காக்கும் அன்பா! யான் உம்மையே முற்றிலும் நம்பி இவ்விலைகளைத் தைரியத்துடன் என் வீட்டிற்கு எடுத்துச் செல்கின்றேன். அதுவரையாவது யான் உயிருடன்வாழக் கிருபை புரியவேண்டும். (இலையை எடுத்துச்செல்லத் தடுமாறி கீழே விழுந்து மூர்ச்சித்தல் - இரக்கமுள்ள தருமதேவர் மீளவும் தோன்றி)

தரு. ஆஹா! இச்சிறுவனின் பக்திதான் என்னே! அந்தோ! இவன் உயிரைக்கவர்ந்து செல்வதற்கு எனக்குச் சற்றேனும் மனம் வரவில்லையே! எனினும் அயனார் ஆக்ஞைப்படி யான் நடந்தே தீரவேண்டும். பாவம்! இச்சிறுவன் "அடியார்களின் அமுதிற்கு இலைகளைக் கொண்டுபோகும் வரையிலாவது என் உயிர் என்னிடமே இருக்க அருள்புரியவேண்டும்" எனக் கெஞ்சியது, என் மனத்தை இன்னும் வருந்தச் செய்கிறது. ஆஹா! பக்தியினால் பரவசமடைந்தேன். என் உள்ளம் கவர்ந்த பாலபக்தனே! இலைகளைக்கொண்டு, உன் தாயைச் சேரும்வரை, உன் உயிர் நிற்கும்! இவ்வளவே நான் உன்பொருட்டுச் செய்யக்கூடியது. (மறைதல்)

மூ. தி. (தருமதேவர் அருள்பெற்ற மூத்ததிருநாவுக்கரசு புதியபலத்துடன் எழுந்து) ஹா! இது என்ன விந்தை! என் தேகத்தில் என்னையும் அறியாமல் ஓர் புதிய உணர்ச்சியும் பலமும் ஏற்பட்டிருக்கின்றனவே! (உற்சாகத்துடன்) தருமதேவர் நம்மீது இரங்கினரோ! தர்மராஜனே! உமக்கு அநந்தகோடி நமஸ்காரம். (வெகு சந்தோஷத்துடன், உதிரம்பட்ட இலைகளுடனும் அரிவாளுடனும் விரைந்து செல்லல்)

[ காக்ஷி முடிகிறது. ]

## காக்ஷி. 6.

இடம் :— அப்பூதி அடிகளின் பூஜாக்கிரகம்.

காலம் :— பகல்.

பாத்திரங்கள் :- அப்பூதி அடிகள், குணவதி, வாகீசன், மூத்த திருநாவுக்கரசு, சுந்தரம் முதலானோர்.

(குணவதியார் பூஜைக்கு வேண்டிய பாத்திரங்களைச் சித்தம் செய்து கொண்டிருத்தல். அப்பூதி அடிகள், மாத்யான்னிகம் முடித்து பூஜைக்கு மடிஜலம் எடுத்து வருதல். வாக்கீசன் வாழைப்பழங்களை வாங்கி வருகின்றான்)

வாக். அம்மா! நான் எவ்வளவு சீக்கிரமாக இப்பழங்களை வாங்கி வந்தேன். அண்ணாதான் இன்னும் வரவில்லை.

சுந். (பிரவேசித்து) அம்மா! சமையல் தயார் செய்துவிட்டேன். இலை போடலாம்.

குண. என்ன! இலைகள் அறுக்கச்சென்ற நமது குழந்தையை இன்னும் காணோம்.

சுந். இதோ வருகிறான் அம்மா! (மூத்த மைந்தன் இரத்தம்பட்ட இலைகளுடன் பிரவேசம்)

மூ. தி. அம்மா! இலைகளைக் கொணர்ந்தேன். இனி என் கவலை நீக்குங்கள்.

குண. (இலையில் இரத்தத்தைக் கவனித்து) அப்பா! இது என்ன இலைகளெல்லாம் இரத்தமாக இருக்கின்றதே! ஏதாவது காயம் ஏற்பட்டதா என்ன?

மூ. தி. ஆம் அம்மா! நான் மரணகாயம் அடைந்து விட்டேன். (மயங்கிக் கீழே அமருதல்)

அப். அடா! கண்மணி! என்னடா சொல்லுகிறாய்?

குண. ஹா ! ஸர்ப்பமா .... ஐயோ !

மூ. தி. அப்பா ! நான் ஒரு சர்ப்பத்தினால் தீண்டப்பட்டேன். (யாவரும் வருந்துதல்) என் தாயே ! பேசமுடியவில்லையே. திருநாவுக்கரசரே ! என்னைக் கண்பாரும். சரி. அம்மா ! தாங்கள் வருந்தவேண்டாம். என்னை எந்தப் பரம் பொருள் உண்டாக்கியதோ அதனிடத்திற்கே யான் செல்லுகிறேன் (கைகூப்பி) அப்பா ! இது என்ன எங்கும் ஓரே இருளாக இருக்கின்றதே ! திருநாவுக்கரசுக்கு எவ்விதத்திலும் அன்னமளிக்கத் தவறாதீர்கள். திருநாவுக் கரசே! ஆ! அதோ தோன்றுகிறது ஜோதி ! நமஸ்-கா-ரம். (யாவரையும் கைகூப்பிய வண்ணம் இறத்தல்)

வாக். அண்ணா ! அண்ணா ! (கீழே விழுந்து விடுகிறான்)

அப். ஆ ! ஆ ! (கண்ணீர் விடுகிறார்)

குண. ஐயோ ! குழந்தாய் ! திருநாவுக்கரசே ! இனி என்ன செய்வேனடா என் செல்வமே ! இனியான் இருந்து என்ன பயன் ! சற்றுமுன்பு துள்ளிக் குதித்து ஓடும்போது தடுக்கி விழுந்ததின் பலனோ இது. அடா ! கண்மணி! என் முகத்தைப் பாரடா ! ஒரு வார்த்தை சொல்லடா! அப்பா! தனியே சென்று இலை நறுக்கையில், சர்ப்பம் தீண்டியபொழுது உன் மனம் என்ன பாடுபட்டதோ! எப்படி பயந்தனையோ! எவ்வாறு புலம்பித் தவித்தனையோ! ஐயோ, இத்தகைய கதியைக் காணவோ யான் பிறந்தேன்! நாவுக்கரசே ! இதுவுமக்கழகோ ! (மேலே விழுதல்)

அப். ஹா ! என் செல்வமே ! என் கண்ணே ! என்னை விட்டுப் பிரிந்தாயே. இவ்வளவு இளம் பருவத்தில் நீ உயிர் துறப் பாய் என்று நான் நினைக்கவில்லையே. இனி என் வாழ்வு தாழ்வாகுமே. ஈசா ! திருநாவுக்கரசே ! இனியான் என்ன செய்வேன் - சீ ! மாயப்பிரபஞ்ச வாழ்வினது போக்கி னைக்கண்டு நாமோ மனங்கலங்குவது !

குண. ஐயோ! இவ்வளவு அற்ப ஆயுளை உடைய மானிடரைப் பரமன் உண்டாக்குவதின் நோக்கம் யாதோ! அடா என் கண்மணி! என்னை அழவேண்டாம் என உன் கனி வாயால் ஒரு வார்த்தை தெரிவியடா! அப்பா! என் அப்பா!

அப். நாம் என்ன செய்வது! அவரவர் விதியின்படி உலகத்தில் ஜனிப்பதும் இறப்பதும் சகஜமே. உயிரோடு இருக்கும் வரையிலும் நமக்கு அவர்கள் சொந்தம். இறந்தபின் நாம் யார்? அவர்கள் யார்? இருவருக்கும் சம்பந்தம் இல்லை. யோசித்துப் பார்த்தால் தாய், தந்தை, பெண்டிர், மக்கள் யாவரும் பூர்வ வினைப்பயன்களால் உண்டானவர்களே. ஆதலால், இறந்தவனைக் குறித்து இனி வருந்துவதில் பயன் என்ன! பெண்ணே! முற்றுமறிந்த நீ, இவ்விஷயத் தைக் குறித்து இனி வருந்துவதில் பயனில்லை. யாவும் நமையாளும் நாவுக்கரசர் செயல்.

குண. பயன் இல்லை என்பது உண்மை. ஆயினும் மனம் தாளவில்லையே. இனி என்ன செய்வது. கோவிலுக்குச் சென்ற நம் திருநாவுக்கரசு ஸ்வாமிகளுக்கு ....

அப். ஆம், அன்னம் போடவேண்டும்! ஈசா! இதற்கு யான் என்ன செய்வேன். என் குழந்தை இறக்கும்பொழுதுகூட திருநாவுக்கரசருக்கு அன்னமளிக்கத் தவறவேண்டாம் எனக் கூறினனே! குணவதி! இதற்குப் பரிகாரம் யாதும் தெரியவில்லையே! என்ன செய்வது, நீயே சொல்.

குண. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இறந்த அகத்தில் மூன்றே முக்கால் நாழிகைவரை தீட்டு இல்லை என்று சொல்லுவார்களே.

அப். ஆம்! அவ்வழக்கம் அனுபவத்தில் இல்லையே.

குண. மைந்தன் இறந்தது ஒருவருக்கும் தெரியாது. ஆதலால் இவனை ஒரு பாயில் வைத்துச் சுருட்டி கொல்லைப்புறத்தில் மறைத்துவைத்து விடுவோம். நாவுக்கரசருக்கு அன்ன மளித்த பின்னர் மற்ற விஷயங்களுக்கு ஏற்பாடுசெய்யலாம்.

அப். ஆம் இதுவும் நல்ல யோசனையே. சுந்தரம்! உள்ளே சென்று ஒரு பாயை எடுத்துவாருங்கள், (சுந்தரம் செல்லல்) வாக்கீசா! அண்ணா இறந்த விஷயத்தைப்பற்றி இன்று மாலைவரை ஒருவரிடமும் கூறாதே.

வாக். இல்லை அப்பா.

அப். சரி! ஸ்வாமிகள் வருகிறாரா என்று பார்த்துவா.

வாக். இதோ வந்துவிட்டேன். (ஓடுதல் - சுந்தரம் பாய் எடுத்து வருதல்)

அப். (பாயை வாங்கி) சிவ! சிவ! சிவ! (பாயால் இறந்த மைந்தனை மூடித் தூக்க எத்தனித்தல்.)

[ காக்ஷி முடிகிறது. ]

## காக்ஷி. 7.

இடம் :— அப்பூதி அடிகளின் பூஜாக்கிரகம்.

காலம் :— பகல்.

**பாத்திரங்கள் :- அப்பூதி, குணவதி, சுந்தரம், வாக்கீசன், திருநாவுக்கரசர், சிவநேசர், முதலிய அடியார்கள்.**

( அப்பூதி, குணவதி, சுந்தரம் மூவரும் பிரவேசித்தல். )

அப். இனிக் கவலையில்லை. நம் பாலகனை வைத்திருக்கும் இடம் வேறு ஒருவருக்கும் புலப்படாது. சுந்தரம் ! அடியார்கள் சாப்பிட்டுப் போகும்வரை இவ்விஷயம் ஒருவருக்கும் தெரியலாகாது. ஜாக்கிரதை. இந்த இலைகளை உள்ளே எடுத்துச்சென்று நன்ருக சுத்தம் செய்யுங்கள்.

சுந். அறிந்துகொண்டேன். ஆ! என்ன பக்தி! (உள்ளேசெல்லல்)

அப். குணவதி ! உன் கவலையைப் போக்கிப் பெரியார்களுடைய பணிவிடைகளிலேயே இனி கண்ணுங் கருத்துமாக இருத்தல் வேண்டும். (வாக்கீசன் ஓடிவருதல்)

வாக். அப்பா ! ஸ்வாமிகள் வருகின்ருர்.

அப். சரி ! எல்லோரும் ஜாக்கிரதையாக இருங்கள். இதோ ஸ்வாமிகள் வருகின்ருர். (நாவுக்கரசர் பக்தர்களுடன் பிரவேசித்தல்) வரவேண்டும் ! ஸ்வாமி ! கைலைநாதன் காக்ஷியைக் கண்டு களித்தீரோ ! நான் இந்நேரம் தங்களுடைய வரவைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

நா. அ. மன்னிக்கவேண்டும். அன்பரே ! கோயிலிற் சிறிது தாமதமாயிற்று. இதோ அப்பெருமானின் விபூதி கொண்டு வந்திருக்கின்றேன். யாவரும் பெற்றுக்கொள்ளுங்கள். (அப்பூதி,கு ணவதி இவர்கள் விபூதிபெற்ற பின், வாக்கீசன் கையை நீட்டுகிறுன் - நாவுக்கரசர் தடுமாறி, பின்பு நிதானித்து)

ஐயா! உமது மூத்த மைந்தன் எங்கே? அவ்வன்பருக்கும் யான் திருநீறு அளிக்கவேண்டும். தயைசெய்து அக் குழந்தையையும் அழைக்க வேண்டுகின்றேன்.

அப். (பிரமித்து, தனிமையில்) அந்தோ! மைந்தன் இறந்தான், எனக்கூறிடிலோ, மகா பக்திமானான இப்பெரியார் நம் கிரகத்தில் போஜனம் செய்யார். உண்மையைக் கூறு விடிலோ, பொய்கூறிய பாவத்திற்கு ஆளாகவேண்டும்! ஆ! இந்த நிலையில் அடியேனைக் காக்கவல்லார் யாவரோ அறியேன். ஸத்குருவே துணை.

நா. அ. ஐயா! எங்கே அச்செல்வர்? அழையும் சீக்கிரம்.

அப். ஆ! இருதலைக்கொள்ளி எறும்புபோல் ஆனேனே. என் செய்வேன்! சீ! உண்மையைக் கூறுதலே நலம். குருவே! அவன் இப்பொழுது இங்கே உதவான்.

நா. அ. என்ன! அவர் இப்பொழுது இங்கே உதவார் என்றிடில் எப்பொழுது எங்கு உதவுவார்? அப்பூதி அடிகளே! உமது சொல் முறைப்படி உற்பத்தியாகவில்லை. ஆதலின் அதன் காரணம் அடியேன் அறிய விரும்புகின்றேன்!

அப். ஸ்வாமி! என் முதல் மைந்தன் இறந்துபட்டனன்.

நா. அ. (இருகாதுகளையும் பொத்திக்கொண்டே) சிவ! சிவ! சிவ! நன்று! கற்ற மைந்தனோ உயிர் துறந்தனன்! பெற்ற தந்தையோ அதை மறந்தனன்! உற்ற அடியனோ மிகச் சிறந்தனன்! நன்று, வெகு நன்று! உம் நெஞ்சத் துணிவே துணிவு! அடிகளே! அவர் இவ்வளவு சடுதியில் இறக்க நேர்ந்ததென்ன? தயைசெய்து சீக்கிரம் தெரிவியும். (அடிகள் தன்னை மறந்து நிற்றல்)

குண. (பயத்துடன்) என் இறைவனே!

( அறுசீர் விருத்தம். )

அருகர்செய் கொடுமை நீங்கி அரன்றிரு வருளைப் பெற்ற
பெருகிய தவத்தீர் ! வாழைப் பெருங்குருத் தரியச் சோலை
மருவிய என்சேய் ஆண்டு வாளராத் தீண்டப் பட்டான்
வெருவினேன் சொல்ல நாவின் வேந்தரே! அருள்செய் வீரே.

தங்களுக்கும், உடன்வந்திருக்கும் பக்தர்களுக்கும் அன்னம் புசிக்கப் போதுமான குருத்து இலைகள் வீட்டில் இல்லாததால் அருகிலிருக்கும் எங்கள் வாழைத்தோட்டத்திற்குச் சென்று இலை அரிந்துவரும்படி அனுப்பினேம். ஏதோ விதிவசத்தால் அவ்விடத்தில், ஓர் ஸர்ப்பம் அவனைத் தீண்டியது.

நா. அ. சம்போ மகாதேவா ! பின்னர்.

குண. தான் கடியுண்டதையும் கருதாது அரிந்த இலைகளை எடுத்துக்கொண்டு இவ்விடத்திற்கு ஓடோடியும் வந்து, இலைகளை வைத்துவிட்டு, தங்களுக்கு அன்னமளிக்க எவ்விதத்திலும் தவறவேண்டாமெனக் கூறியபின் இம்மண்ணுலகை விட்டு நீங்கினன். ஆதலின் தயைசெய்து அவன் வேண்டுகோளின்படி இனி ஒரு தடையும் சொல்லாது போஜனங் கொள்ள வேண்டுகின்றோம்.

நா. அ. ஆ ! என் தாயே ! தேவரீர் மனமும், இத்தன்மையானதாக இருக்குமென்று நாயேன் சிறிதும் கருதவில்லை. தாங்கள் இப்பொழுது வெளியிட்ட வார்த்தைகள் அளிந்த புண்ணில் அம்பு சொருகியதே போல் இருக்கின்றனவே. நீங்கள் கடின மனமுடையவர்கள். இத்தன்மையான கொடும் செய்கையை வேறு எவரும் செய்திலர். ஆதலின் ! உங்களது திருக்குமாரர் இறந்த இச்சமயம் யாம் உமது கிரகத்தில் அன்னம் கொடோம். (தன்னுடன் வந்த பக்தர்களை நோக்கி) அன்பர்களே !

## ( அறுசீர் விருத்தம். )

தாண்டவம் புரியு மீசன் தாளிணைமறவாத் தொண்டர் !
ஆண்டவன் அடியைப் பேணும் அப்பூதி அடிக ளார்தம்
மாண்டஅச் சேயை ஏந்தி வல்லையில் வருவீர்அன்பர்க்
கீண்டருள் கைலை நாதன் இலங்குசந் நிதியின் முன்னே !

நண்பர்காள் ! மேலான சிவபக்தியுடைய இவ்வந்தணருடன் சென்று, அரவந்தீண்டி இறந்த அப்பக்த சிரோன்மணியை அருகிலிருக்கும் ஸ்ரீ கைலைநாதன் விளங்கும் திருச்சந்நிதானத்திற்கு தடைசெய்து கொண்டுவருவீர். (கோயிலை நோக்கிச்செல்ல, திகைப்புற்ற அடியார், சவத்தை எடுத்துவர உள்ளே செல்லல்.)

[ காக்ஷி முடிகிறது ]

## காக்ஷி. 8.

இடம் :— ஸ்ரீ கைலாநாதனின் திருச்சந்நிதானம்.

காலம் :— நண்பகல்.

பாத்திரங்கள் :- திருநாவுக்கரசர், அப்பூதி, குணவதி, சுந்தரம், வாக்கீசன், சிவநேசர் முதலான அடியார்கள்.

(திருநாவுக்கரசர் வருந்தியவண்ணம் நிற்கின்றார். இறந்த மைந்தனின் உடல் சந்நிதியின் முன்பு பாயால் மூடிய வண்ணமிருத்தல். அப்பூதி, குணவதி, வாக்கீசன், சுந்தரம், அடியார்கள், மற்றும் பலர் கைகட்டிய வண்ணம் மௌன மாக விருத்தல்.)

நா. அ. பக்தர்களே! இப்பாலன்மீது இருக்கும் பாயை எடுங்கள். (அடியாரில் ஒருவர் அவ்விதமே செய்ய, நாவுக்கரசர் தமது இரண்டு கைகளும் சிரசின்மேல் குவியக் கண்களினின்றும் அருவி போல் நீர்வீழ, உரை தடுமாற, தேகம் முழுவதும் நடுங்க பூமியின் மீது விழுந்து எழுந்து) எல்லாம் சிவமென நின்றாய் போற்றி! எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி! கொல்லுங் கூற்றைக் கொன்றாய் போற்றி! தொல்லை அகற்றும் துணைவா போற்றி! நஞ்சுடை கண்டத்து நாதனே போற்றி! அஞ்சலென எம்மை ஆள்வாய் போற்றி! சரவண பவனின் தந்தாய்! போற்றி! அராவிடம் தீர்த்தே அருள்வாய் போற்றி; ஹே சம்போ! சங்கரா! மாசற்ற தேவா! அடியார்களுக்கு அனுகூலா! பக்தர் விஸ்வாசா! பாப விமோசனா! பரமகாருண்ய சீலா! அபயம்! அபயம்!! மகா பக்திமானுக்குப் பிறந்த இப்பாலகனோ அரவம் தீண்டி இவ்வளவு சீக்கிரம் இறப்பது! பெற்ற தாயும் தந்தையும் நீரே என நம்பிய இவ்வப்பூதி அடிகளுக்கு இம்மீளாத்துயரத்தை உண்டாக்க உமது மனமும் எவ்வாறு பொறுத்ததோ! இதுவும் தமது திருவுளச் சம்மதமோ!

இது உம் கருணைக்கழகோ! இது முறையோ! இது தருமந்தானோ! ஹே! அநாத இரக்ஷகா! உம்மிடம் அன்பு கொண்ட உத்தம அந்தணரை இவ்விதம் பரிதபிக்கச் செய்வது, உமது பெருமைக்குச் சரியோ! ஏ! தயா நிதியே! அந்நாளில் தம்மை நிராகரித்தும், அவமதித்தும், தூஷணை செய்த தக்ஷனை சம்ஹாரம் செய்தும், மீண்டும் அவனுக்கு உயிர்பிச்சையளித்து அவனைத் தமது சிவகணங் களுக்கெல்லாம் தலைவனாகச் செய்தீரே! என் கண்ணின் மணியே! கருணா நிதியே! அன்பர்களுக்கு இன்பமளிக்கும் பேரின்ப வெள்ளமே! காலால் உதைத்த கண்ணப்ப ருக்கும், வில்லால் அடித்த விஜயன் தனக்கும், பிரம்பால் அடித்த பாண்டியனுக்கும், தாக்கிய கல்லுடைச் சாக்கிய ருக்கும் வேண்டிய அருள் ஈந்து ஆட்கொண்டதாம், தம்மை என்றும் அண்டிப்பணியும், இந்தஅப்பூதி அந்தண ருக்கு இன்னல் இழைத்தலும் நீதியோ! என் தாயே! என் தந்தையே! என் குலதெய்வமே! என்னுயிர்த் துணையே! என் அறிவுக்கு அறிவாகிய இறைவனே! பாசமயப் படுகுழியான மீளா நரகத்தில் விழ இருந்த, அஞ்ஞானத்தையுடைய அடியேனையும் ஒரு பொருளாக உள்ளத்திற்கொண்டு, சூலைநோய் கொடுத்து மீட்ட கருணைக்கடலே! அக்காலத்தில் பாற்கடலில் எழுந்த விஷத்தைப் பானஞ்செய்து வானவரையும், தானவரையும் உயிர்ப்பித்த உமக்கு, இக்காலத்தில் சற்றுமுன் விஷந் தீண்டியிறந்த இவ்வரும் பாலகனை உயிர்ப்பித்தலும் அருமையோ! ஏ! நீலகண்டா! உன்பாதமே சதமென நம்பிய அப்பூதி அந்தணரின் மீது இரக்கங்கொண்டு, இவ் விறந்துபோன பக்த சிரோன்மணியான பாலகனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்க, அடியார்க்கும் அடியேனாகிய, இச்சிறியேன் உம்மை வேண்டுகின்றேன்.

( விஷந்தீர்த்த பதிகம். )

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே.

* * *

ஆறுகொ லாமவ ரங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே.

* * *

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுந்நெரிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்றலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே.

(கீழே மெய்மறந்து விழல்)

அசரீரி. திருநாவுக்கரசரே! ஐம்புலன்களையும் வென்ற பக்தர்களே! உங்களுடைய வேண்டுகோள் கேட்கப்பட்டது. உத்தம பக்தர்களின் தன்மையையும், அவர்கள் வன்மையையும், பலர் அறியும் பொருட்டே இச்சம்பவம் நிகழ்ந்தது. அப்பூதி அடிகளே! இனி உமது திருக்குமாரன் உயிர் பெற்று எழுவானாக. (மூத்தமைந்தன் உறங்கி எழுந்தவன்போல் எழ யாவரும் ஆச்சரியத்துடன் நாவுக்கரசரைப் பணிதல்.)

மூ. தி. பெரியீர்! இது என்ன! நான் இங்கு வந்தகாரணமென்ன? ஒன்றும் விளங்கவில்லையே!

நா. அ. பக்தரே! இனி யாவும் விளங்கும். சடுதியில் ஈசனை வணங்கிப் புறப்படும் அகத்திற்கு.

மூ. தி. உத்தரவு. (வணங்கி எழ, நாவுக்கரசர் விபூதி கொடுத்துப்பின்னர் வாக்கீசனுக்கும் அளிக்கிறார்.)

நா. அ. அடிகளே! உமது மைந்தன் உயிர்பெற்று எழுந்ததைக் கண்டு சந்தோஷியாமல் நீர் ஏன் இன்னும் விசனத்துடன் நிற்கின்றீர்?

அப். என் குருவே! அச்சிறுவன் இந்நேரம்வரை தங்கள் திருஅமுதிற்குத் தடையாக நின்றனனே எனவே வருந்துகின்றேன்.

நா. அ. இதற்கோ வருந்துகின்றீர்! இனி கவலை விடுவீர். நண்பர்களே! வாருங்கள். அன்பின் பெருக்கால் ஊட்டப் பெறும் திருஅமுதை உண்டு செல்வோம்.

(யாவரும் களிப்புடன் செல்லல்.)

[ காக்ஷி முடிகிறது. ]

## காக்ஷி. 9.

இடம் :— திங்களூரில் ஓர் சாலை.

காலம் :— காலை.

பாத்திரங்கள் :— சிவநேசர், தேசிகர், சுந்தரம், திருநாவுக்கரசர், அப்பூதி அடிகள் அடியார்கள் முதலானோர்.

(சிவநேசர், தேசிகர், மற்றும் சில அடியார்கள் பேசிக்கொண்டிருத்தல்)

சி. நே. ஆஹா! சில நாட்களாக அப்பூதி அடிகள் வீட்டில் அளிக்கப்பெற்ற அமுதின் சுவையையும், அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பையும் யாம்....

தேசி. எடுத்துரைக்க இயலாது. இத்திங்களூரையும், இப்பக்தரையும் விட்டுச் செல்கிறோமே என்பதை நினைக்க என் மனம் மிகவும் வருந்துகின்றது.

சி. நே. நம் ஸ்வாமிகள் என்ன இன்னும் வரவில்லை.

தேசி. அந்தணரின் கிரகத்தில் கொஞ்சம் தாமதித்து வருவார் போல் தோன்றுகிறது. கூடிப்பிரிவது மிகவும் கஷ்டமல்லவா. (சுந்தரம் பிரவேசம்)

சுந். ஆஹா! தாங்கள் கூறியது முற்றிலும் உண்மை.

சி. நே. சுந்தரமையர்வாள்! வரவேண்டும். வரவேண்டும். திருநாவுக்கரசர் இன்னும் புறப்படவில்லையே.

சுந். வந்துவிடுவார். ஏதோ இரகசியமாக நமது ஐயர்வாளிடம் பேசிக்கொண்டிருக்கின்றார். ஸ்வாமிகள் எந்த ஊருக்கு இன்று புறப்படுகிறாரென்று தங்களுக்குத் தெரியுமோ?

தேசி. ஏன்! திருச்சோற்றுத்துறை என்னும் திருப்பதிக்குச் செல்லுகின்றார்.

சுந். அப்படியா! பெரியவர்களே! அடியேனுடைய ஞாபகம் தங்களுக்கெல்லாம் எப்பொழுதும் இருக்கவேண்டும். நானோ பக்தியறியாதவன்.

சி. நே. ஸ்வாமி! அப்படிச் சொல்லலாகாது. எங்களுக்காக மிகவும் சிரமப்பட்டு, செய்த சமையலின் சுவையையும், தங்களுடைய இனிய சொற்களையும் கவனிக்குங்கால், ஈசனிடத்திலும் நமது திருநாவுக்கரசரிடத்திலும், அப்பூதி அடிகளிடத்திலும் நீர் வைத்திருக்கும், உண்மை பக்தி நன்கு வெளியாகின்றது.

சுந். எல்லாம் தங்களுடைய ஆசீர்வாதந்தான்.

தேசி. அல்ல. எல்லாம் நம் திருநாவுக்கரசினுடையதுதான்.

சுந். அதற்குச் சந்தேகமென்ன ! ஆஹா ! என்ன ஆச்சர்யம் ! என்ன அற்புதம் ! சாதாரணமான மனிதர்களால் ஆகக் கூடிய காரியமா ! தம் திருவாக்கால் அப்பூதி அடிகளது மூத்தமகனை உயிர்ப்பித்தெழச் செய்த அப்பெரியாருக்கு, திருநாவுக்கரசு என்ற பெயர் முற்றிலும் தகும்! தகும்! நண்பர்களே ! யானும் இவ்வப்பூதி அந்தணரின் கிரகத்தில் பல வருடங்களாக சமையல் செய்து வருகின்றேன். அவரைப்போன்ற பக்திமானை யான் இதுகாறும் கண்டிலேன். அவர்தான் அப்படியென்றால் இலக்ஷ்மி கடாக்ஷம் பொருந்திய அவர் மனைவி, மைந்தர் யாவரும் பக்திக்கு வழி இதுதான் என பாமஜனங்களுக்கும் வழிகாட்டிகளாய் விளங்குகின்றனர். அறத்தின் மேன்மையும், அன்பின் தன்மையும், பக்தியின் சக்தியுமன்றோ இவ்வப்பூதி அடிகளின் இறந்த மைந்தனை, உயிர்பெறச் செய்தது. பக்தர்களே ! அப்பூதி அடிகள் பேரின்பத்தை அடைய எண்ணி, செருக்குக்கும், பொறாமைக்கும் விரோதத்திற்கும் காரணமாகிய ஜாதிபேதம் என்கிற பெரும் வியாதியை அறவே நீக்கி, தன் குல உயர்வைச் சிறிதேனும் பாராட்டாமல், சைவ மதத்திலே, வேளாளர் குலத்திலே, திருஅவதாரமான, தெய்வீகத்தன்மை பொருந்திய, திருநாவுக்கரசரையே குருவென்று எண்ணி, யாவரும் பிரமிக்கும்படி அஞ்சலி செய்தார். அதனால் மேன்மையுற்றார். அவா

செய்கைதான் அப்படியென்றால் இந்நாவுக்கரசின் பெருமைகளை யான் எவ்வாறு புகழ்வேன்! அந்தணர் குலத்துதித்தோர் தம்மை வணங்குகின்றாரே என ஏங்கிச் சற்றேனும் தாமதியாமல் தானும் அவ்வப்பூதியின் பாதங்களில் வீழ்ந்து, அவரைப் போற்றிக் கொண்டாடியதை நினைக்க என் மனம் இன்னும் உருகுகின்றது. அவ்வடியார் அவ்வந்தணரின் பொருட்டு சிவபெருமான் சந்நிதியில் வருந்தியதைக்கேட்க யார்தான் பரவசமடையார்! (கைகூப்பி) அன்பர்களே! நம் தாய் நாட்டு மக்கள் யாவரும் தெய்வ பக்தியிற் சிறந்தவர்களாக மாறி மேன்மையடைய இத்தகைய உத்தம பக்தர்களைப்போல் இன்னும் பலரை நம் நாட்டிற்கு அளிக்க எல்லாம் வல்ல ஜகத் இரக்ஷகன் அருள் புரிவானாக. பெரியோர்களே! தங்களுக்கு மிகவும் சிரமத்தைக் கொடுத்துவிட்டேன். ஆதலின் மன்னிக்க வேண்டுகின்றேன். என்ன! சமையல் செய்பவன் நம்மிடம் பிரசங்கம் செய்தனனே, என எண்ணாது அடியேன் சொல்லையும் தங்கள் மனதில் இருத்திக் கொள்வீர்களென நம்புகிறேன். அதோ அடிகளும் நாவுக்கரசரும் வருகின்றார்கள். ஆதலின் யான் உத்தரவு பெற்றுக்கொள்ளுகின்றேன். (உள்ளே செல்ல அப்பூதி அடிகளும் நாவுக்கரசரும் வருதல்)

நா. அ. பிராமண சிரேஷ்டரே! அடியேன் சென்றுவருகின்றேன்.

அப். என் குருவே! இந்த உலகம் என்னும் மாயக்கடலின் கரை தெரியாமல் பேதைபோல் தட்டுத் தடுமாறிய எனக்கு ஞானதேசிகராக வந்து நல்ல வாசலைத் திறந்து, ஞான வாசலிற் புகுத்தி என்னை புனிதப்படுத்திய பிரபோ! யான் உம்மை விட்டு எவ்வாறு பிரிவேன்.

நா. அ. அன்பீர்! வருந்தவேண்டாம். யாவும் ஈசன் செயல். (நமஸ்கரிக்க, அப்பூதி அடிகளும் வணங்குகின்றார்)

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.

நமப்பார்வதீபதயே (யாவரும் ஹர ஹர மகாதேவ" என்று சொல்ல) அடியார்களே! புறப்படுங்கள். (செல்லல் - அவர்கள் யாவரும் மறைந்தபின் பெருமூச்சுடன் அப்பூதி அடிகள் வருந்துகிறார்)

அப். பெரியவர்களுடைய தரிசனத்தால் பெறுதபொருளும் ஒன்று உண்டோ. இல்லை. இல்லை. இனி இவர் உபதேசித்தபடியே ஈசனை வணங்கியே அவர்தம் எழில்பதம் அடைவேன்.

[ காக்ஷி முடிகிறது. ]

நாடகம் முற்றிற்று.

(கட்டளைக் கலித்துறை.)

உற்றான் அலன்தவந் தீயினின் றானலன் ஊண்புனலா
வற்றா னலன்நுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம்
பெற்றான் ஒருநம்பி அப்பூதி யென்னும் பெருந்தகையே.

(சிவப்பிரகாசர்)

(எழுசீர் விருத்தம்.)

கல்வியே ஞானம் கவின்பெரு செல்வம்
கதியருள் யாவும் வாக்கீசச்
செல்வரே என்று சிந்தனை செய்தே
சிவனருள் சேர்ந்த அப்பூதி
எல்விரி உணர்வோ டெம்பிரான் அன்பர்
எழிற்றிரு நாமமிங் கிசைப்போர்
தொல்வினை தீர்ந்து தூயபே ரின்பம்
துய்க்கநன் மார்க்கம்நல் கினரே.

ஓம் தத் ஸத்.